සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I, II**

13757

## අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
## General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலங்கள்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

### கர்நாடக சங்கீதம் I

அறிவுறுத்தல்கள் :

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பின்வரும் ஜதிச் சொற்களில் கண்ட நடைக்குப் பொருத்தமானது
(1) தகிட (2) தகதிமி (3) தகதகிட (4) தகதிமி தகதகிட

**2.** பஞ்சபுராணத்தில் திருவிசைப்பாவிற்கு அடுத்ததாக சுத்தாங்கமாகப் பாடப்படுவது
(1) தேவாரம் (2) திருமந்திரம் (3) புராணம் (4) திருப்பல்லாண்டு

**3.** ஆரோகணத்திலும் அவரோகணத்திலும் காந்தாரம், தைவதம் வர்ஜமாக வரும் இராகம்
(1) ஆரபி (2) தோடி (3) மத்யமாவதி (4) பந்துவாரளி

**4.** "தபஜபயோகஞ்செய்" என்று ஆரம்பிக்கும் சரணத்தைக் கொண்ட கீர்த்தனை
(1) உள்ளமிரங்கி (2) இனிநமக்கொரு
(3) அள்ளியுண்டிடலாம் (4) மாயன் குழலிசையில்

**5.** பின்வரும் உருப்படிகளுள் அனாகத எடுப்பில் ஆரம்பிக்கும் உருப்படி
(1) "உன்னையல்லால்..." - சிம்மேந்திரமத்யமம் - ஆதி
(2) "ஆடும் கலாப மயில்..." - கல்யாணி - ஆதி
(3) "சிவகாம சுந்தரி..." - முகாரி - ஆதி
(4) "மயில்வாகனா..." - மோகனம் - ஆதி

**6.** பமரீ ஸரிகம இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள இசைக் குறியீடு
(1) ஏற்ற ஜாரு (2) வளைவுக்கோடு (3) படுக்கைக்கோடு (4) கமகம்

**7.** ஸட்ஜம் பஞ்சமம் உட்பட ரி கி மி த நி என்னும் ஸ்வர சங்கேதங்களை எடுத்துக்கொள்ளும் ராகம்
(1) கரஹரப்பிரியா (2) கீரவாணி (3) கல்யாணி (4) ஷண்முகப்பிரியா

**8.** பின்வரும் கூற்றுகளில் வீணை வாத்தியத்திற்குப் **பொருந்தாத** கூற்று
(1) தாளத் தந்திகளையுடைய வாத்தியமாகும்.
(2) வாத்தியங்களின் அரசியாகக் கருதப்படுவது.
(3) இது ஒரு காற்று வாத்தியமாகும்.
(4) மெட்டுக்களையுடைய வாத்தியமாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

**9.** “பண்டுநால்வருக்கு.........” என்னும் தேவாரம் பாடப்பட்ட தலம்
(1) திருக்கேதீச்சரம் (2) திருக்கோணேஸ்வரம்
(3) திருவீழிமிழலை (4) திருப்பிரமபுரம்

**10.** பா, மபாமகரீகரிஸா என்னும் ஸ்வரக் கோர்வையின் மொத்த அட்சர எண்ணிக்கை
(1) 12 (2) 13 (3) 14 (4) 15

**11.** செம்பாலைப்பண் குறிக்கும் கர்நாடக இராகம்
(1) கரஹரப்ரியா (2) தோடி (3) சங்கராபரணம் (4) ஹரிகாம்போஜி

**12.** சியாமாசாஸ்திரி அவர்களின் சொத்து என சிறப்பிக்கப்படும் இராகம்
(1) பைரவி (2) ரீதிகௌளை (3) ஆனந்தபைரவி (4) சாவேரி

**13.** ஹிந்துஸ்தானி இசைக்கச்சேரியில் பிரதானமாக வாசிக்கப்படும் தாள வாத்தியம்
(1) டோல்கி (2) தபேலா (3) ஸாரங்கி (4) ஷெனாய்

**14.** திருப்பாம்புரம் டி. என். சுவாமிநாதபிள்ளை அவர்களால் வாசித்துப் பிரபல்யமடைந்த இசைக்கருவி
(1) புல்லாங்குழல் (2) வீணை (3) மிருதங்கம் (4) நாதஸ்வரம்

**15.** வில்லுப்பாட்டு இசைத்தலின்போது வில்லின் இடப்புறம் நாண்கயிற்றினால் இணைக்கப்படும் வாத்தியம்
(1) விற்கடம் (2) டோலக் (3) உடுக்கை (4) சலங்கை

**16.** பின்வருவனவற்றுள் பதம் பற்றிய கூற்றுகளுள் மிகப்பொருத்தமானது
(1) தமிழ்ப்பதங்கள் பெரும்பாலும் கிருஷ்ணன் மீது பாடப்பட்டவையாகும்.
(2) பதங்கள் அப்பியாசகானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவானவையாகும்.
(3) சிருங்கார ரசத்தையும், பக்தி உணர்வையும் வெளிப்படுத்தும் உருப்படி ஆகும்.
(4) நாட்டிய நிகழ்ச்சிகளில் இறுதியில் இடம்பெறும் உருப்படி ஆகும்.

**17.**

| $I_5$ | O | $I_5$ |
|---|---|---|
| ஸரீகரி | ஸரி | ஸரிகாம |
| ரிகாமக | ரிக | ரிகமாப |

மேலே தரப்பட்ட அலங்காரத்தின் மூன்றாவது ஆவர்த்தனமாக வருவது
(1) கமபாம கம கமாபத (2) காமபம கம காமபத
(3) கமாபம கம கமபாத (4) காமபத கம காமபத

**18.** ஆரோகண அவரோகணத்தில் வரிசைக்கிரமமின்றி திரிந்து வரும் இராகங்களில் ஒன்று
(1) பிலஹரி (2) கமாஸ் (3) மோகனம் (4) ஹம்சத்வனி

**19.** “முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்” என்ற தேவாரத்தைப் பாடியவர்
(1) திருஞானசம்பந்தர் (2) மாணிக்கவாசகர்
(3) சுந்தரர் (4) திருநாவுக்கரசர்

**20.** எல்லா அங்கங்களிலும் சாகித்தியத்தைக் கொண்ட உருப்படி
(1) ஆடவர்ணம் (2) தில்லானா (3) தானவர்ணம் (4) ஜதீஸ்வரம்

**21.** திருநெல்வேலி, தென்காசி போன்ற இடங்களிலுள்ள சில ஆலயங்களில் தேவாரம் பாடும்போது வாசிக்கப்படும் ஹிந்துஸ்தானி வாத்தியம்
(1) சித்தார் (2) ஸ்ரோட் (3) ஸாரங்கி (4) ஷெனாய்

**22.** வயலின் வாத்தியத்தின் தந்திகளை சுருதி சேர்க்கும்போது அதன் ஒழுங்கு முதலாம் தந்தியிலிருந்து முறையே வருவது
(1) D G A E (2) E A D G (3) A D G E (4) E D A G

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

**23.** தமது பெயரையே முத்திரையாகப் பயன்படுத்திய வாக்கேயகாரர்கள்
(1) தியாகராஜ ஸ்வாமிகள், கோபாலகிருஷ்ண பாரதியார்
(2) பாபநாசம் சிவன், முத்துத்தாண்டவர்
(3) தியாகராஜ ஸ்வாமிகள், பாபநாசம் சிவன்
(4) முத்துத்தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார்

**24.** சப்தஸ்வரங்கள் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களாக பேதமடைவதற்கு காரணமான ஸ்வரங்கள்
(1) விவாதி ஸ்வரங்கள் (2) பிரக்ருதி ஸ்வரங்கள்
(3) கோமள ஸ்வரங்கள் (4) விக்ருதி ஸ்வரங்கள்

**25.** "ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே" எனும் திருப்புகழ் அமைந்துள்ள சந்த அமைப்பு
(1) தான தனதன தான தனதன தான தன தானா
(2) தானதன தானதன தானதன தானா
(3) தானதன தனதான தானதன தானதானா
(4) தனதன தான தனதனதான தனதானா

**26.** பின்வருவனவற்றுள் அனைத்து இராகங்களும் விவாதி தோஷத்திற்கு உட்பட்டதாகவும் சுத்த மத்யம இராகங்களாகவும் அமைந்துள்ள சக்கரங்கள் முறையே
(1) 2 ஆம் 4 ஆம் (2) 7 ஆம் 12 ஆம்
(3) 1 ஆம் 6 ஆம் (4) 1 ஆம் 7 ஆம்

**27.** பின்வரும் கூற்றுகளில் இராகமாலிகை என்னும் உருப்படியின் இலக்கணம் **அல்லாதது**
(1) குறைந்தது ஏழு இராகங்களாவது இருத்தல் அவசியம்.
(2) பண்டைய காலத்தில் இதனை இராகக் கதம்பம் என அழைத்தனர்.
(3) இதன் சாகித்தியம் பக்திரசம் அல்லது சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும்.
(4) விலோம சிட்டைஸ்வரத்தைக் கொண்டிருக்கும்.

**28.** "சின்னஞ் சிறுக்கிளியே" என்னும் இராகமாலிகையில் "கன்னத்தில் முத்தமிட்டால்" என்னும் பாடல்வரி இடம்பெறும் பகுதி அமைந்துள்ள இராகம்
(1) நீலமணி (2) திலங் (3) வசந்தா (4) காபி

**29.** பண்டைத் தமிழிசையில் துத்தம், தாரம் ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்ட ஸ்வரங்கள் முறையே
(1) காந்தாரம், நிஷாதம் (2) மத்யமம், தைவதம்
(3) ரிஷபம், நிஷாதம் (4) மத்யமம், நிஷாதம்

**30.** சங்கராபரண இராகத்தில் ரிஷபம், தைவதம் ஆகிய ஸ்வரங்களைக் கோமளஸ்வரங்களாகக் கொண்டால் வரும் இராகம்
(1) கரஹரப்ரியா (2) சக்ரவாகம்
(3) மாயாமாளவகௌளை (4) தோடி

**31.** சங்கீத மும்மூர்த்திகளால் உருவாக்கப்பட்ட இசைப்பீடம்
(1) தஞ்சாவூர் (2) மைசூர் (3) திருவனந்தபுரம் (4) சென்னை

**32.** ஸ நி̣ ப̣ நி̣ ஸ ரிம ப நி ஸ்̇ ரி̇ ஸ்̇ ...

மேலே தரப்பட்ட ஸ்வரக்கோர்வையில் காணப்படும் மந்தரஸ்தாயி, மத்தியஸ்தாயி, தாரஸ்தாயி ஸ்வரங்களின் எண்ணிக்கைகள் முறையே
(1) 4, 5, 3 (2) 3, 6, 3 (3) 3, 5, 4 (4) 4, 6, 3

**33.** பஞ்சபுராணம் ஓதுவதில் திருவாசகத்தின் பின் பாடப்படும் திருமுறை
(1) 6 ஆம் திருமுறை (2) 7 ஆம் திருமுறை
(3) 8 ஆம் திருமுறை (4) 9 ஆம் திருமுறை

**34.** அரடா என்னும் பாகத்தையுடைய வாத்தியம்
(1) நாதஸ்வரம் (2) வீணை (3) மிருதங்கம் (4) தவில்

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk

**35.** "காணாமல் வீணிலே காலம் கழித்தோமே..." என்னும் தன்யாஸி இராகக் கீர்த்தனையை இயற்றியவர்
(1) முத்துத்தாண்டவர்
(2) பாபநாசம் சிவன்
(3) மாயூரம் வேதநாயகம்பிள்ளை
(4) ஊத்துக்காடு வெங்கடஸுப்பய்யர்

**36.** பின்வருவனவற்றில் பாஷாங்க இராகம் ஒன்றிற்கு இணையான பண்
(1) நட்டபாடை
(2) செந்துருத்தி
(3) காந்தார பஞ்சமம்
(4) வியாழக் குறிஞ்சி

**37.** இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட பிரிவுகள் பற்றி முதன் முறையாகக் குறிப்பிடும் நூல்
(1) சங்கீதரத்னாகரம்
(2) ஸ்வரமேளகலாநிதி
(3) சங்கீதஸுதாகரம்
(4) சதுர்த்தண்டிப்பிரகாசிகை

**38.** இசையுடன் கூடிய உரையாடல் மூலம் கதையைக் கூறும் நாடகம்
(1) நாட்டிய நாடகம்
(2) இசை நாடகம்
(3) நிருத்திய நாடகம்
(4) ஓரங்க நாடகம்

**39.** பல்லிய நிகழ்ச்சி ஒன்றில் மாணவர் ஒருவர் பங்குபற்றுவதால் பெற்றுக்கொள்ள முடியாத அனுபவம்
(1) பல்வகை வாத்தியங்களையும் அறிந்துகொள்ளுதல்
(2) பல்வகை உருப்படி வகைகளை அறிந்துகொள்ளுதல்
(3) பல்வகை வாத்தியங்களையும் வாசிக்கும் திறனைப் பெறுதல்
(4) ஒத்திசைவு பற்றிய அறிவினைப் பெறுதல்

**40.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - எளிமையான சொற்கள் அடங்கிய சிறுவர் பாடலாக இருத்தல் வேண்டும்.
B - பலவிதமான தாளங்களிலும், நடைகளிலும் அமைக்க வேண்டும்.
C - தத்துவக் கருத்துக்கள் நிறைந்த பாடல்களைத் தெரிவுசெய்ய வேண்டும்.
D - தாம் கேட்டறிந்த மெட்டுக்களில் இசையமைக்க முயற்சி செய்ய வேண்டும்.

மாணவர்கள் சிறுவர் பாடல் ஒன்றினை இசையமைக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய மிகப்பொருத்தமான செயற்பாடுகள்.
(1) A, C (2) A, D (3) B, C (4) B, D

Education கல்வி අධ්‍යාපන

* *

[பக். 5 ஐப் பார்க்க

kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

## கர்நாடக சங்கீதம் II

※ **முதலாம் வினாவையும் வேறு நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(i) வேத. பூ. என்னும் சங்கேதத்தினால் குறிப்பிடப்படும் இராகம் யாது?

(ii) 'தாரரந்திரம்' என்னும் பாகத்தையுடைய வாத்தியம் யாது?

(iii) அப்பியாசகான உருப்படிகளுள் சாகித்திய ரூபமாகப் பாடப்படும் முதல் உருப்படி யாது?

(iv) மேகராகக்குறிஞ்சிப் பண்ணிற்கு இணையான இராகம் யாது?

(v) 'மாதர் மடப்பிடியும்' என்ற பதிகத்திற்கு யாழ் வாசித்தவர் யார்?

(vi) முதன் முதலில் மனித பார்வைக்கு வந்த பிரதிமத்யம ராகம் யாது?

(vii) கோவூர்ப் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றியவர் யார்?

(viii) நாட்டுப் பாடல் முறையில் 'கண்ணன் குழல் வாரக் காக்கையை அழைத்தல்' என்னும் பாசுரத்தைப் பாடியவர் யார்?

(ix) மகேந்திரவர்மன் காலத்தின் இசை வளர்ச்சியை வெளிப்படுத்தும் **இரண்டு** இசைக் கல்வெட்டுக்களும் யாவை?

(x) முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய **இரண்டு** நவாவர்ணக் கீர்த்தனைகளைத் தருக.

**2.** பின்வரும் இராகங்களுள் ஏதேனும் **ஓர்** இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.)

(i) பந்துவராளி

(ii) ஆரபி

(iii) தோடி

**3.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கம் தருக.

(i) தானவர்ணம்

(ii) அப்பியாச கானம்

(iii) கால அளவைக் காட்டும் குறியீடுகள்

**4.** தவில் வாத்தியம் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) தவில் வாத்தியத்தின் படத்தினை வரைந்து அதன் பாகங்களைக் குறிப்பிடுக.

(ii) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

(iii) இவ்வாத்தியத்தை வாசிக்கும் முறையினை விளக்குக.

(iv) இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்கள் **இரண்டினைத்** தருக.

(v) இவ்வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யமடைந்த **நால்வரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

[பக். 6 ஐப் பார்க்க

kalvi.lk

**5.** கோபால கிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

(i) பிறந்த இடமும், வருடமும்

(ii) அவரது இளமைக்காலம்

(iii) அவரது இசைப்பணி

(iv) அவரது பிரதான சீடர்கள் இருவர்

**6.** (i) சாபு தாளத்தின் வகைகளைக் கூறி அவற்றினை உதாரணங்களுடன் விளக்குக.

(ii) சப்த தாளங்களில் மட்டிய தாளம், அடதாளம் என்பன ஜாதி பேதம் அடையும் முறையினை அட்டவணைப்படுத்துக.

**7.** நீர் பார்த்து இரசித்த கர்நாடக இசைக்கச்சேரி ஒன்றினைப் பின்வரும் விடயங்களின் கீழ் விமர்சிக்குக.

(i) பக்க வாத்தியங்களும், மேடையமைப்பும்

(ii) உருப்படிகளின் தெரிவு

(iii) கலைஞனின் பாடும் திறன்

(iv) சபையோரின் ரசனையும் பாராட்டுக்களும்

**அல்லது**

இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.

❊❊❊

Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page